88—

காற்று மாசு

*__52837__—**திரு. சோழன் சித. பழனிச்சாமி:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, வீரசேகரபுரம் ஊராட்சி, புதுநகரில் உள்ள எண்ணெய் தொழிற்சாலையினால் ஏற்படும் காற்று மாசினைக் கட்டுப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“மனிதன் என்பவன் தெய்வம் ஆகலாம்,
வாரி வாரி வழங்கும்போது வள்ளல் ஆகலாம்,
வாழைபோல தன்னைத் தந்து தியாகி ஆகலாம்,
உருகி ஓடும் மெழுகுபோல ஒளியை வீசலாம்,
ஊருக்கென்று வாழ்ந்த நெஞ்சம் சிலைகள் ஆகலாம்
உறவுக்கென்று விரிந்த உள்ளம் மலர்கள் ஆகலாம்”

என்ற வரிகளுக்கு ஏற்ப கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டோடு வாழ்ந்து, எங்களை வழிநடத்தி வருகின்ற மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புனிதப் பாதங்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டம், காரைக்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட புதுவயல் கிராமத்தில் திருவாளர் மலர் சால்வண்ட் எக்ஸ்டிரக்ஷன் லிமிடெட் நிறுவனம், நெல் தவிட்டிலிருந்து எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலையை இயக்கி வருகின்றது. இத்தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்டு சொந்த நிலத்தில் விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது. தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் காற்று மாசினைக் கட்டுப்படுத்த காற்று மாசுக் கட்டுப்பாட்டு சாதனங்கள் பொருத்தப்பட்டு இயக்கத்தில் உள்ளன. புகைப்போக்கி வழியாக வெளியேறும் காற்றின் தரம் நிர்ணயிக்கப்பட்ட தர

2015 மார்ச் 30]

அளவிற்கு உட்பட்டுள்ளது. தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் சாம்பல் திடக்கழிவு விவசாய நிலங்களுக்கு உரமாகப் பயன்படுத்த அனுப்பப்படுகிறது. தொழிற்சாலையின் இயக்கத்தை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் தொடர்ந்து கண்காணித்து வருகின்றது. வாரியத்தினுடைய நிபந்தனைகள் மீறப்படுகின்றபட்சத்தில் ஆலைமீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.

திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசைநோக்கி வணங்குகிறேன். காரைக்குடி தொகுதி, வீரசேகரபுரம் ஊராட்சியில் இருக்கக்கூடிய மலர் சால்வண்ட் நிறுவனத்தில் நெல் தவிட்டிலிருந்து எண்ணெய் எடுக்கும்போது வெளியேறும் தூசுகளால் காரைக்குடி-அறந்தாங்கி நெடுஞ்சாலையில் இருசக்கர வாகனங்களில் செல்பவர்களும், பொதுமக்களும் மிகவும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகின்றனர். அந்தத் தூசு கண்ணில் படும்போது கண் எரிச்சல் ஏற்பட்டு, வாகன ஓட்டிகள் விபத்துக்குள்ளாகிறார்கள். ஆகவே, மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் மூலமாக இன்னும் கூடுதல் கவனம் செலுத்தி அந்தத் தொழிற்சாலையிலிருந்து வரக்கூடிய தூசினைக் கட்டுப்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், எனது தொகுதிக்குட்பட்ட தேவகோட்டை தாலுகா, ஊரவயல் கிராமத்தில் அமைந்துள்ள அண்ணாமலையார் பேப்பர் மில்லில் இருந்து கழிவுநீர் மிகக் கூடுதலாக அங்கே இருக்கக்கூடிய வீரையன்குடி, அண்டக்குடி, பிரம்பவயல், திருத்தங்கல் போன்ற பொதுப் பணித் துறை கண்மாய்களில் விடப்படுகிறது. அதனால், ஆயிரக்கணக்கான விவசாய நிலங்கள் பாதிப்படைந்திருக்கும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அண்ணாமலையார் பேப்பர் மில்லில் இருந்து வரக்கூடிய கழிவுநீரை உடனடியாக நிறுத்துவதற்கும், அந்த மில்லின்மீது நடவடிக்கை எடுப்பதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன தொழிற்சாலையிலிருந்து வெளிவருகின்ற காற்று மாசினைக் கட்டுப்படுத்துவதற்கு காற்று மாசுக் கட்டுப்பாட்டு சாதனங்களை அந்த ஆலை அமைத்து செயல்படுத்தி வருகிறது. அது வாரியத்தின் மூலமாக தினந்தோறும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. அந்த ஆலை காற்று மாசினை மீறப்படுகின்ற பட்சத்தில் அந்த ஆலைமீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 11–30

அடுத்ததாக, காகிதத் தொழிற்சாலை பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வினா எழுப்பியிருக்கின்றார்கள். அந்தத் தொழிற்சாலையானது பழைய காகிதங்களை மூலப்பொருட்களாகக் கொண்டு எழுதும் தாள் மற்றும் அச்சிடும் தாள் என, நாள் ஒன்றுக்கு 20 டன் தயாரிக்கின்றது. அந்தத் தொழிற்சாலை நாள் ஒன்றுக்கு 275 கிலோ லிட்டர் கழிவுநீரை வெளியேற்றுகிறது. இந்தக் கழிவுநீரை சுத்திகரிப்புச் செய்ய, சுத்திகரிப்பு கழிவுநீர் நிலையத்தை அந்த ஆலை அந்தப் பகுதியில் அமைத்துள்ளது. சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் முழுவதும் மறுசுழற்சி செய்வது கண்டறியப்பட்டிருக்கின்றது. இந்தக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து வெளிவருகின்ற திடக் கழிவுகளைக் காகித அட்டை தயாரிக்கும் குடிசைத் தொழிற்சாலைகள் எடுத்துச் செல்கின்றன. கொதிகலன் சாம்பல் விவசாய நிலங்களுக்கு உரமாகப் பயன்படுத்தப்படுவதாக அறியப்படுகிறது. இந்தத் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவுநீர் பொதுப் பணித் துறை பராமரிக்கின்ற கண்மாய்களில் வெளியேற்றப்படுவதாக புகார்கள் வந்துள்ளன. இந்தத் தொழிற்சாலையை 16–10–2014 அன்று ஆய்வு செய்தபோது, சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் மறுசுழற்சி செய்வது கண்டறியப்பட்டுள்ளது. தொடர்ந்து செய்யப்படும் ஆய்வுகளிலும் கழிவுநீர் வெளியேறாவண்ணம் மறுசுழற்சிக்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்தத் தொழிற்சாலையில் அமைக்கப்பட்டுள்ள கொதிகலனிலிருந்து வெளியேற்றப்படும் காற்று மாசைத் தடுக்க 25 மீட்டர் உயரம் உள்ள புகைபோக்கிமூலம்

2015 மார்ச் 30]

அந்தக் காற்று மாசு வெளியேற்றப்படுகிறது. இந்தத் தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் காற்று மாசு மற்றும் கழிவுநீர் பற்றிய புகார்கள் எழுகின்றபட்சத்தில், தொழிற்சாலைகள்மீது சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.

திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காகித ஆலையிலிருந்து வெளியேறக்கூடிய கழிவுநீர் மூலமாக விவசாய நிலங்கள் பாதிப்பதோடு, மழையை நம்பி இருக்கக்கூடிய எங்களுடைய மாவட்டம், எங்களுடைய தொகுதி, மழைநீரில்கூட அந்த விவசாயத்தைச் செய்ய முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே, முற்றிலுமாக அந்த ஆலையிலிருந்து வெளியேறக்கூடிய கழிவுநீரை நிறுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே காகித ஆலைகளிலிருந்து வெளியில் வரக்கூடிய கழிவுநீரை மறுசுழற்சி செய்து அந்த ஆலைக்கு உட்பட்டு இருக்கின்ற விவசாய நிலங்களுக்கு உரமாகப் பயன்படுத்தப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கழிவுநீரை அந்த ஆலையிலிருந்து பொதுப் பணித் துறையினுடைய கண்மாய்களுக்கு அனுப்புகின்றபட்சத்தில், அந்த நிலை கண்டறியப்பட்டால், அந்த ஆலையின்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 89, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.